# சித்ரவதைக்கான காரணங்கள்

- குடும்ப தகராறுகள்
- பணப் பிரச்சனை
- பெற்றோர்களின் கோபம்
- போதைப்பொருள் மற்றும் மது உட்கொள்ளுதல்
- குடும்பப் பிரச்சனைகள்
- தவறான உறவில் பிறந்த குழந்தைகள்
- பாலியல் வன்மம்
- மாற்றாந்தாய் / மாற்றாந்தந்தை குழந்தை / தத்தெடுக்கப்பட்ட குழந்தை
- குழந்தைகள் / ஊனமுற்ற சிறார்கள்
- அதீதத் துடிப்புமிக்க சிறார்கள்

# சித்ரவதையைத் தவிர்க்கும் முறைகள்

- சிறார்கள் சித்ரவதைத் தடுப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் அனைத்து தரப்பினரு ம் பங்கு வகிக்க வேண்டும்.
- சிறார்களைச் சித்ரவதை செய்யும் நபர்களுக்கு உரிய தண்டனை வழங்க சட்ட அதிகாரத்தை மேம்படுத்துதல்.
- வீட்டில், பள்ளியில், மருத்துவமனையில், குழந்தைப் பராமரிப்பு இல்லத்தில் மற்றும் பிற இடங்களில் பாதுகாப்பு மற்றும் உரிய அங்கீகாரத்தை வழங்குதல்.
- ஒவ்வொரு தனிமனிதனும் அமைதியான மற்றும் மகிழ்ச்சியான சமூகத்தை உருவாக்குவதில் பங்கேற்க வேண்டும்.

# சிறார்களை அன்புடன் வளர்த்தல்.

- சிறார்களின் தவறுகளை அன்பு மற்றும் இரக்க மனப்பான்மையுடன் கையாள வேண்டும்.

- முழங்காலுக்கு மேல் சிறார்களை அடிக்கக் கூடாது.
  கொடுக்கும் தண்டனை படிபினையாக மட்டுமே அமைய வேண்டும்.
  அறிவிப்பவர்: அபு ஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு முஹம்மது நபி உரைத்தார்:

  விளக்கம்:
  "உங்களில் ஒருவர் சண்டையிடும்போது அவர் முகத்தில் (அடிப்பதில் இருந்து) விலகி இருக்க வேண்டும்."

  (ஹதீஸ் முஸ்லிம் வரலாறு)

- சிறார்களுக்கு தொழுகையைக் கற்றுக்கொடுங்கள்
  நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஹதீஸின் பொருள்:
  " உங்கள் பிள்ளைகளைத் தொழ கட்டளையிடுங்கள்.
  அவர்கள் ஏழு வயதை அடைந்தவுடன் தொழ மறுத்தால் அவர்களை முறையாக தண்டிக்கவும்.

  (அபு தாவூத் அறிவித்த ஹதீஸ்)

- பெற்றோர்கள் அழகி முன்மாதிரியாக இருக்க வேண்டும்.
  பெற்றோரின் நன்னடத்தையை குழந்தைகள் உற்று கவனிக்கிறார்கள்.
  இதனைக் கருத்தில் கொண்டு பெற்றோர்கள் நல்ல பண்புகள் மற்றும் மார்க்கம் சார்ந்த போதனைகளைப் பின்பற்ற வேண்டும்.



**JHEAINS**

JABATAN HAL EHWAL AGAMA ISLAM NEGERI SEMBILAN

NO

# சித்ரவதை வேண்டாம் என்று சொல்லுங்கள்



**JABATAN HAL EHWAL AGAMA ISLAM NEGERI SEMBILAN**
**(BAHAGIAN PENGUATKUASAAN)**
Pusat Dakwah Islamiah, Jalan Paroi Senawang,
70400 Seremban Negeri Sembilan Darul Khusus
Tel: 06-6771890 / 1891 | Fax: 06-6771802
email: pkuasaan.jheains@ns.gov.my

jheains.ns.gov.my | jheainsofficial | jheains.official
jheains_n9 | jheains tv | jheainsofficial

## சித்ரவதை

சிறார்கள் மற்றும் 18 வயதுக்கு குறைந்தோர் மீது கொடுரமான செயல் புரிதல் சித்ரவதை என வகைப்படும். உடல், உணர்வு பாதிப்பு, பாலியல் தொல்லை மேலும் புறக்கணிப்பு சித்ரவதையில் அடங்கும்.

## சித்ரவதை பொருளடக்கம்

மனித பண்புக்கு எதிராக இருப்பதால் இஸ்லாம் சித்ரவதையைத் தடை செய்கிறது.

அல்லாஹ்வின் வசனம்:
இதன் பொருள்:

"வறுமைக்குப் பயந்து உங்க ள் குழந்தைகளைக் கொல்லாதீர்கள்;
நாம்தான் அவர்களுக்கும் உங்களுக்கும் வாழ்வாதாரம் வழங்குகிறோம். உண்மையில் அவர்கள் செய்யும் கொலை பாவமான செயலாகக் கருதப்படுகிறது.

**(சூரா அல்-இஸ்ரா 17:31)"**



# சிறார் சித்ரவதையின் வகைகள்

## உணர்ச்சி சித்ரவதை

உணர்ச்சி ரீதியான சித்ரவதைக்கு ஆளாகும்போது அவரின் மனநிலை மற்றும் உணர்ச்சி பாதிப்படைகிறது.
உதாரணம்: குழந்தைகளை அவமானப்படுத்துதல் அல்லது குறை கூறுதல், குழந்தைகளை மிரட்டுவது, உரக்கக் கூச்சலிடுவது, இழிவு சொற்களைப் பயன்படுத்தி அழைப்பதை முற்றிலும் தவிர்க்க வேண்டும்.

## உடல் சித்ரவதை

சிறார்களை வேண்டுமென்றே அல்லது நோக்கம் இல்லாமல் உடலில் காயம் ஏற்படுத்துவது.
எடுத்துக்காட்டுகள்: உதைத்தல், குத்துதல், கழுத்தை நெறித்தல் மற்றும் அடித்தல்.

## பாலியல் சித்ரவதை

சிறார்கள் பாலியல் தொல்லை மற்றும் ஆளாகும்போது பாலியல் செயல்பாடுகளின் அடிப்படையில் பாதிக்கப்படுகின்றனர்.
உதாரணம்: ஒரு நபரின் பாலிய ல் ஆசையை திருப்திப்படுத்த வேண்டிய கட்டாயத்துக்கு ஆளாகுதல் அல்லது செல்வாக்கு, ஆபாச உபகரணங்கள் மற்றும் பாலியல் நடவடிக்கைகளுக்கு பாதிப்படைதல்.

## புறக்கணிப்பு

பெற்றோர்கள் சிறார்களுக்குத் முறையான உடல், உணர்ச்சி பாதுகாப்பு, சுகாதாரம், கல்வி மற்றும் தங்குமிடம் போன்ற அடிப்படைத் தேவைகளை வழங்கத் தவறுதல்.
உதாரணம்: பாதுகாப்பற்ற சூழலுக்குச் சிறார்களை வளர அனுமதித்தல்.

# சிறார் சித்ரவதையின் விளைவுகள்

## உளவியல் விளைவுகள்

- தற்கொலை முயற்சி
- பதட்டம்
- மனச்சோர்வு
- தனிமையை நாடுதல்( பிறருடன் பழக வெட்கம், சங்கடம் அல்லது பயம்)
- உணவு மற்றும் தூக்க பாதிப்பு ( உணவு உட்கொள்வதில் நாட்டமின்மை அல்லது தூங்குவதில் சிரமம் )
- கல்வியில் தடை ( ஆர்வமின்மை அல்லது கவனம் செலுத்த இயலாமை )
- சுயமாகக் காயப்படுத்திக் கொள்ளுதல்
- மன அதிர்ச்சி

## உடல் விளைவுகள்

- சிராய்ப்பு, வீக்கம்
- சுளுக்கு அல்லது எலும்பு முறிவு
- எரித்தல்
- உட்காருவதில் அல்லது நடப்பதி ல் சிரமம்
- வலி, சிராய்ப்பு அல்லது மர்ம உறுப்பில் இரத்தப்போக்கு
- மர்ம உறுப்பில் பாதிப்பு ( பாலியல் நோய் )
- தனிப்பட்ட சுகாதார பிரச்சனைகள்